முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

OS. No.239/2024

Witness-DW-2

பெயர் / லட்சுமணன்

**த.பெ - கோபால்**

**இன்று** (06.11.2025) **சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.**

சத்தியமாகச் சொல்கிறேன்

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

பிரதிவாதிகளுக்கு திருவண்ணாமலையில் பாத்தியமான சொத்துக்கள் உள்ளது என்று நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை நேரில் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை, பிரதிவாதிகள்இ வாதியின் கணவருக்கு அடமானம் எழுதிக்கொடுத்தாக எனது முதல் விசாரணையில் சொ்ல்லியுள்ளேன் அந்த அடமானப் பத்திரத்தில் நான் சாட்சியாக உள்ளேனா என்றால் சாட்சியாக உள்ளேன், வேறு எந்த ஆவணத்திலும் நான் கையெழுத்திடவில்லை என்றால் பிரதிவாதிகள் வேறு ஒரு அடமானம் வாதியின் பெயருக்கு ஏற்ப்டுத்திய ஆவணத்திலு ம் நான் சாட்சியாக உள்ளேன், வாதியின் கணவர் வெளிநாட்டில் இருந்தபோது பிரதிவாதிகளிடம் போனில் பேசிக்கொண்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், பிரதிவாதிகள் அவர்களுக்கு பாத்தியமான திருவண்ணாமலையில் உள்ள சொத்தை வேறு ஒரு நபருக்கு பவர் பத்திரம் எழுதிக்கொடுத்தது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், பவர் கொடுத்த சொத்து விற்கப்பட்டுவிட்டதா அல்லது இன்னும் உள்ளதா என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது, அடமானப் பத்திரம் அதற்குரிய ரூ,**8இ00இ000**. க்கு எழுதப்பட்டுளள்து நான் ஊர் வழக்கப்படி இரட்டிப்பாக எழுதப்பட்டுள்ளது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, நான் அடமானப் பத்திரத்தில் இன்னார் என்று நிருபிக்க அடையாளம் காட்டுவதற்காகத் தான் நான் சாட்சியாக இருந்துள்ளேன்இ அந்த ஆவணத்தின் உள்ளடக்கம் பற்றி தெரியாது என்றால் சரியல்ல, வாதி வெளியூறில் குடியிருக்கிறார் பிரதிவாதி எங்கள் ஊரில் வசித்து வருவதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல,

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-.A.Tamilselvan,M.L.,
Principal Subordinate Judge ,
Villupuram